**கவனிக்க.-** 2007.08.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1513 - 2007 අගෝස්තු 31 වැනි සිකුරාදා - 2007.08.31

1513 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 764 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 766 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 768 |
| ஏல விற்பனைகள் | 770 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, செத்தெம்பர் 07 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஓகத்து 24 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## வத்தளை பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை-2008

*2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்படும் :-*

(i) *தற்போது அமுலிலிருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் நிபந்தனைகளுக்கமைவாகவும்,*

(ii) *1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப்பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்கத்தில் மேல் மூலையில் தவறணையின் பெயரையும், இலக்கத்தையும் "................... இலக்க ........................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2007.09.24 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2007.09.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைக்கமைய விற்பனை பெறத் தவறும் தவறணைகள் எதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2007.10.22 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.*

*7. இது விடயமாக மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*என். நிமல்கா டயஸ்,*
*பிரதேச செயலாளர்,*
*வத்தளை.*

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*வத்தளை,*
*2007.08.13*

**அட்டவணை**

| இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரவைப்பு பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வத்தளை | திம்பிரிகஸ்யாய | 2007.09.24 மு.ப. 10.30 | 7,260 |
| 2. | வத்தளை | உஸ்வெடகய்யாவ | | 4,840 |
| 3. | வத்தளை | போபிட்டிய | | 7,260 |
| 4. | வத்தளை | கஹவத்த | | 6,050 |

*8-876*

---

## லுணுகல பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2008

*2008, சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 2008, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள லுனுகலை பிரதேச செயலாளரின் பிரிவில், புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கமைவாக 2007.09.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.*

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையினுள் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளத்தக்கதான குறித்த விண்ணப்பப்படிவத்தினை முறைப்படி பூர்த்தி செய்து, இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரக் கட்டணத்தினைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்றுப்பத்திரத்துடன் பெயரிடப்பட்டுள்ள கடிதக் கூட்டினுள் இட்டு, கடிதக் கூட்டின் மேல் இடதுபக்க மூலையில், கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்தத்தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் லுனுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரக்காரர்கள் கேள்விப்பத்திரப் படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திர படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பத்தை இட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2007.09.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் லுனுகலை பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன் குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2007.10.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கமைவாயிருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக் கொண்டார் எனப் பிரகடனப்படுத்தப்படின், அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அவர் லுனுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையை, இரண்டு மாதக் கட்டணத்திற்குக் கூடுதலான தொகையினை வைப்பாக என்னிடம் செலுத்தி, தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்து கொள்ள வேண்டிய வேறு விபரங்களை லுனுகலை பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
லுனுகலை.

பிரதேச செயலாளர் அலவலகம்,
லுனுகலை.
2007.08.03

**அட்டவணை**

**லுனுகலை பிரதேச செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள்**
**(2008.01.01 ஆந் திகதி தொடக்கம் 2008.12.31 ஆந் திகதி வரை)**

| தொடர் இல. | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | பி. செ. பிரிவும் தவறணையின் அமைவிடமும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப் பத்திரங் களை ஏற்றுக் கொள்ளப்படு கின்ற கடைசி திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | இல. 02-லுனுகலை | லுனுகலை | பசறை பிரதேச சபையின் லுனுகலை உப அலுவலகத் தின் 1 ஆம் இலக்க வட்டா ரத்தில் வரிமதிப்பீட்டு இலக்கம் 219 ஐக் கொண்ட, குருவிகும்புர வத்த | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூபா. 5,000 | 2007.09.12<br>மு. ப. 10.30 |

மாஹதோவை தோட்ட எல்லைக்குள், இரவு நேர சிற்றுண்டிச்சாலைக்கு 2008 ஆம் வருடத்திற்காக அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை, தோட்ட அதிகாரி 2007.09.12 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக லுனுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

8-891

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப் படுகிறது :-

*கம்பனியின் பெயர் :* குட் லங்கா மோட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனிப் பதிவு இல. :* PV 60771
பதிவுசெய்த திகதி : 25.07.2007
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :*இல. 145/5, கண்டி வீதி, தொலங்கமுவ.

செயலாளர்,
ஜே & ஏ மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்.

8-905

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, யூலை 28 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* GLOBAL NETWORK STUDIES (PRIVATE) LIMITED
*கம்பனியின் இலக்கம் :* PV 60686
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 32, காம்டன் லேன், கொழும்பு 06

கம்பனி செயலாளர்கள்,
மனேஜ்மென்ற் அன்ட் பிஸ்னஸ் அட்வைசறி
சேவிஸ்சஸ் பிரைவெட் லிமிட்டெட்.

8-1102

---

### பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கு அமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* விஸ்டா ஒடோமேசன் & டெக்னொலோஜீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
*கூட்டிணைப்புத் திகதி :* 02.08.2007
*கம்பனி பதிவு இலக்கம் :* PV 60873
*பதிவு செய்த விலாசம் :* இல. 83, ராஜகிரிய வீதி, ராஜகிரிய

பணிப்பாளர் சபை.

8-1048

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் "Roche Pharm Products (Pvt) Ltd" அறிவிப்பது -

*கம்பனியின் பெயர் :* Roche Pharm Products (Pvt) Ltd
*பதிவு அலுவலகம் :* இல. 27, சென். மேரீஸ் வீதி, கல்கிசை
*பதிவு இலக்கம் :* PV 60106

8-938

---

### கம்பனிகள் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் நிமித்தம் கீழ்தரப்பட்ட கம்பனிகள் பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர் :* ஷங்டொங் சென்யங் இன்டநேஷனல் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 60787
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : 60, வஜிரா வீதி, கொழும்பு 04
பதிவுசெய்யப்பட்ட திகதி : 20.07.2007

*கம்பனியின் பெயர் :* மிஷன் லொஜிஸ்டிக் சேவிசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 60636
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : 42, லுக்மன்ஜி சதுக்கம், கிரான்ட்பாஸ், கொழும்பு 14
பதிவுசெய்யப்பட்ட திகதி : 13.07.2007

செயலாளர்கள்.

8-1036

---

### அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வத்தளை, ஹெந்தல கெரவலபிட்டிய, மடகொன் வீதியில் இலக்கம் 168/03 இல் வசிக்கும் ஜேசுதாசன் பிலிப் பத்மனாதன் என்னும் நான், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இதனால் அறிவிப்பது என்னவென்றால், என்னால் 10.03.2004 ஆந் திகதியன்று வத்தளை, ஏகித்த, இலக்கம் 189 இல் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு பி. விஜயரத்னவின் இலக்கம் 527 மூலம் மல்வத்த,

மயவானா, இலக்கம் 63/இ வசிக்கும் ஒண்ணத்தரகே சமந்தா பிரேமலால் கோமஸ் என்பவருக்கு அளிக்கப்பட்ட அட்டோணி தத்துவப்பத்திரம் 31.08.2007 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டது. மற்றும் சொல்லப்பட்ட அட்டோர்ணி தத்துவப்பத்திரம் மேற்கூறிய திகதியில் இருந்து செல்லுபடியாகாது என்றும் மற்றும் நான் பொறுப்பில்லை என்று அறிவிக்கிறேன்.

ஜேசுதாசன் பிலிப் பத்மனாதன்.

8-1085

---

### அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கெட்டஹெத்த ஹுலத்துல, இல. 494/A இல் வசிக்கும் ப்ரதிராஜ ஜயவர்தன வீரசிங்க முதியன்சே ராலஹாமிகே மொனிகா மீபானி குமாரி தஸநாயக்க (திருமணத்திற்கு முன் மாரபே) ஆகிய நான், 1996.09.24 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு ரொஹான் வெலன்கல்ல அவர்களால் தயாரித்த இல. 146 ஐக் கொண்ட அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம், அவிஸ்ஸாவல்லை, கொழும்பு வீதியில் 53/16 எனும் இடத்தில் வசிக்கும் சமிந்த ஜயனாத் மன்மேன்து என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தை இதன் மூலம் இரத்துச் செய்துள்ளேன் என்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகிறேன்.

ப்ரதிராஜ ஜயவர்தன வீரசிங்க முதியன்சே ராலஹாமிகே
மொனிகா மீபானி குமாரி தஸநாயக்க
(திருமணத்திற்கு முன் மாரபே).

8-839

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம்

### மீடியா டிபைன்ட் (பிரைவட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கம்பனி 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதியில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதோடு, அதன் அலுவலகம், ஜோன் வில்சன் பாட்னர்ஸ், சட்டத்தரணிகள் மற்றும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுகள், இலக்கம் 365, டாம் வீதி, கொழும்பு 12 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

கீர்த்தி வீரசேகர, (சட்டத்தரணி),
செயலாளர்,
மீடியா டிபைன்ட் (பிரைவட்) லிமிட்டெட்.

2007, ஒகத்து 17.

8- 875

---

### கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றது.

(1) கம்பெனியின் பெயர் : ஈஸ்ட் பொய்ண்ட் இலவன் ஜபான் பிரைவட் லிமிட்டெட்
(2) கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும்: PV 60696 18.07.2007.
(3) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : 444/4 லேக் வீதி, அகுரகொட, பத்தரமுல்லை.

பணிப்பாளர்.

08- 894

---

### கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றது.

(1) கம்பெனியின் பெயர் : மனிசா பொலிமர் பிரைவட் லிமிட்டெட்
(2) கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும்: PV 60843, 31.07.2007
(3) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 38, சால்ஸ் வீதி, கொழும்பு 03.

பணிப்பாளர்.

08- 895

---

### கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றது.

(1) கம்பெனியின் பெயர் : தம்சர பினான்ஸ் அன்ட் இன்வெஸ்மன்ட் பிரைவேட் லிமிட்டெட்
(2) கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும், PV 60624.
(3) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 105, 2 ஆம் கட்டம், அபேசேகர வீதி, கல்கிஸ்சை.

டீ. ஏ. ஆர். அஜந்த,
முகாமை பணிப்பாளர்.

8- 873

---

### கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றது.

1. கம்பெனியின் பெயர் : திகமடுல்ல பொன்ஸ் பிரைவட் லிமிட்டெட்
2. கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும்: P. B 3258, 26.07.2007.

3. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 362, கொழும்பு வீதி, பெயிலியான, பொரலஸ்கமுவ.

பணிப்பாளர்.

8- 896

---

### கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றது.

(1) கம்பெனியின் பெயர் : மனுவல் ஒவ் பிரைவட் லிமிட்டெட்

(2) கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும்: PV 60745, 23.07.2007.

(3) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : "விலா ஹுன்திர", பஸியவத்தை, தலஹேன, நீர்கொழும்பு.

பணிப்பாளர்.

8- 897

---

### கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க. கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பெனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றது.

(1) கம்பெனியின் பெயர் : பெர்னாண்டோ கன்ஸல்டன்ஸி (பிரைவட்) லிமிட்டெட்

(2) கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும்: PV 60925, 06.08.2007.

(3) கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : 12/31, ரொலி பெர்னாண்டோ மாவத்தை, கடுபெத்தை, மொறட்டுவை.

பணிப்பாளர்.

8- 898

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகை விற்றல் - 2008

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ் காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2008, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2008, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன) :-

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள் :

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப் படிவங்கள் மூலம் கேள்விப் பத்திரங்களை ரூ. 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆதனங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதே போன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆதனங்கள் தொடர்பான "சான்றிதழ் 05" செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆதனச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகை காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆதனங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றுடன் கேள்விப் பத்திரத்தை முன்னளித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆதனங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடி காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்பதாவது முன்னளித்தல் வேண்டும்:-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து,
(ஆ) கொழும்பு 2, ச்டேப்லற் வீதி மதுவரி அலுவலகத்திலிருந்து,
(இ) கொழும்பு மதுவரி சபை அலுவலகத்திலிருந்து,
(ஈ) களுத்துறை,
(உ) சிலாபம்.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின்மேல் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

"2008 ஆம் ஆண்டிற்காக மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைக்கான கேள்விப்பத்திரம்"

2007.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களை பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளைக் கைச்சாத்திட அல்லது குறிக்கப்பட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரின் பெயரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு :-

**அட்டவணை**

| (ஏ) பிரிவு | (பி) மதுபான தவறணை உள்ளடக்கப் படும் பிரதேசம் | (சி) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (டி) மதுபான விற் பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஈ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை | (எவ்) கேள்விகள் மூடப்படும் நேரம் | (ஜீ) விற்கப் படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| 1. மொரட்டுவை மாநகர சபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொரட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலி பாதையின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு.ப. 11.00<br>பி.ப. 5.00 | பி.ப. 2.00<br>பி.ப. 8.00 | ரூபா 5,000 | மு.ப. 10.30 | 2007.09.19 |

8. மேலதிக விபரங்களை மொரட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **கவனிக்க.**-2007.09.19 ஆந் திகதிக்கு வாடகைக்கு விட இயலாத வெளிநாட்டு மதுபான தவறணைகள் 2007.10.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடி குத்தகையில் விற்கப்படும்.

பி. கே. சோமபால,
பிரதேச செயலாளர்,
மொரட்டுவை.

பிரதேச செயலகம்,
மொரட்டுவை,
2007, ஓகத்து .

9-886

# ஏல விற்பனைகள்

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

### பெறுமதிமிக்க காணித்துண்டு ஒன்றின் ஏல விற்பனை

*(இவ்வாதனம் நுகேகொடை, டீ. எஸ். ஜயசிங்க மாவத்தை, 27 ஆம் இலக்கத்தில் த யூனிவேர்ஷல் வேர்க்ஸ் (டெக்ஸ்டைல்) புரொஜெக்ட் என்னும் பெயர் மகுடத்தின்கீழ் ஏக உரிமையாளராக வியாபாரம் நடத்தும் நுகேகொடை, டீ. எஸ். ஜயசிங்க மாவத்தை, 27 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த விதான கமகே நளின் ஷானக ரணவீர என்பவரால் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு தெயத்தர சமரசிங்க அத்தாட்சிப்படுத்திய 1997, மாச்சு 5 ஆந் திகதிகொண்ட 2260 ஆம் மற்றும் 2001, பெப்புருவரி 19 ஆந் திகதிகொண்ட 2655/2657 ஆம் இலக்க ஈட்டுமுறிகளினால் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு பிஎல்சீ க்கு ஈடுவைக்கப்பட்டதாகும்.)*

மேல் மாகாணம், கொழும்பு மாநகர சபையினதும் மாவட்டத்தினதும் எல்லைகளுக்குட்பட்ட கறுவா தோட்டம், வோர்ட் பிளேஸில் அமைந்துள்ளதும் சுக்கஹஸ்தான் காரிடின்ஸ் தற்பொழுது 12 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும் முன்னர் வோர்ட் பிளேஸ், 24/ 5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் குட்வூட் என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். டொன் டேவிட் தயாரித்த 1935, பெப்புருவரி 22 ஆந் திகதிகொண்ட 2050 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களையும் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 6 என்பதற்கு எல்லைகளாக– வடக்கில் : மேற்படி 2050 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 7 ; கிழக்கில் : வோர்ட் பிளேஸ் ; 30 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட ரில்டன் வளவுகள் ; தெற்கில் : ரொஸ்மீட் பிளேஸ் 41 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட சிறிவியல்ஸ் வளவுகள் ; மேற்கில் : துண்டு 5 மற்றும் 20 அடி அகல வீதி என்பன அமைந்துள்ளன. 2050 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு முப்பத்திநாலும் நூறில் தொண்ணூற்றைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 34 95/100). இது கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 757/ 106 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பகலில் அல்லது இரவில் இடையறாது எல்லா நேரங்களிலும் கால்நடையாகவோ அல்லது வேறு வகையாகவோ எவ்வாறாயினும் குதிரை, மந்தைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள், ஒவ்வொரு விதமானதும் விவரணத்தினதானது மான வாகனங்கள் என்பவற்றுடனோ அவை இன்றியோ சுமை ஏற்றப்பட்டோ சுமை ஏற்றப்படாமலோ அதன் வழியாகவும் அதன் மீதும் உட்செல்வதற்கும் வெளிச்செல்வதற்கும் அதன் ஊடாகச் செல்வதற்கு மான முழுமையானதும் கட்டுப்பாடற்றதுமான உரிமையையும் சுதந்திரத்தையும் அனுமதியையும் உரிமத்தையும் அத்துடன் அவசியமானதெனக் கருதப்படக்கூடியவாறு அல்லது வசதிப்படக் கூடியவாறு அதன் மீது அதன் மேல் அல்லது அதனடியில் மின்சார இணைப்புகளையும் வடிகாலையும் நீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்களையும் மூலக் குழாய்களையும் (எவையுமிருப்பின்) தொடுப்ப தற்கு எத்தன்மையதுமான மின்சார வடங்களையும் மேந்தலைக் கம்பிகளையும் வடிகால்களையும் வாயு, நீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்களையும் மூலக்குழாய்களையும் வேறு உபகரணங்களையும் சாதனங்களையும் அமைப்பதற்குமான முழுமையானதும் கட்டுப் பாடற்றதுமான உரிமையையும் சுதந்திரத்தையும் சேர்த்து.

மேற்படி கறுவா தோட்டம், வார்ட் பிளேஸில் அமைந்துள்ளதும் 2050 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படுவதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (20 அடி அகல வீதிக்கென ஒதுக்கப்பட்டது). இதற்கு எல்லைகளாக– வடக்கில் : வார்ட் பிளேஸ் ; கிழக்கில் : வார்ட் பிளேஸ், 26 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட 'விலா பைரன்ஸ்' வளவுகள் மற்றும் மேற்படி 2050 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 7 மற்றும் 6 ; தெற்கில் : மேற்படி 2050 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 5 மற்றும் 4 ; மேற்கில் : மேற்படி 2050 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் 1, 2, 3 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2050 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு முப்பத்திரண்டும் நூறில் முப்பத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 32 36/ 100பே.). இது கொழும்பு காணிப்பதிவகத்தில் ஏ 734/ 259 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(2) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகரசபை எல்லைகளுக்குட்பட்ட (தற்பொழுது கல்கிசை பதிவகப் பிரிவில்) பிட்டகோட்டேயில் அமைந்துள்ளதும் பாகொட வீதி, 139 மற்றும் 139/ ஏ வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் கொட்டனுவெவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரி. டீ. டபிள்யூ. பி. பெரேரா தயாரித்த 1987, யூன் 28 ஆந் திகதிகொண்ட 718 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடத்துடன் சேர்த்து. மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக– வடக்கில் : பாகொட வீதி, 143/ 3 மற்றும் 143/ 4 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்கள் கொண்ட வளவுகள் ; கிழக்கில் : பாகொட வீதி, 141 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவுகள் ; தெற்கில் : பாகொட வீதி ; மேற்கில் : பொதுப் பாதை மற்றும் கான் என்பன அமைந்துள்ளன. மேற்படி 718 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் இருபத்தாறு தசம் ஒன்பது சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 26.90பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் எம் 1746/ 238 என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(3) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திற்கும் மாநகர சபைக்குமுட்பட்ட வெள்ளவத்தை, பாமன்கடை வீதி பின்னர் மேட்டுத் தெரு இப்பொழுது டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தையில் அமைந்துள்ளதும் முன்னர் 434, 435, 436 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்களையும் பின்னர் 62, 64, 66 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்களையும் தற்பொழுது 62 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தையும் கொண்டுள்ளதுமான காணித்துண்டுகள் முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்களையும் மற்றும் அனைத்தையும் சேர்த்து.

(1) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திற்கும் மாநகர சபைக்குமுட்பட்ட வெள்ளவத்தை டபிள்யூ. ஏ. டீ. சில்வா மாவத்தையில் அமைந்துள்ளதும் 2 ஆம் இலக்க பதிவு வரைபடத்திலுள்ளதுமான துண்டு 205 ஆகிய காணித்துண்டு முழுவதும். இதற்கு எல்லைகளாக–

வடக்கில் : வீதி ; கிழக்கில் : துண்டு 204 ; தெற்கில் : துண்டு 206 ; மேற்கில் : துண்டு 205 என்பன அமைந்துள்ளன. 1891, ஏப்பிறல் 7 ஆந் திகதி கொண்ட பதிவுசெய்யப்பட்ட வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் பத்தோடு நூறில் அறுபது பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10 60/100பே.). இது கொழும்பு காணிப்பதிவகத்தில் வெள்ளவத்தை 154/252 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(2) மேற்படி வெள்ளவத்தை டபிள்யூ. ஏ. டீ. சில்வா மாவத்தையில் அமைந்துள்ள 2 ஆம் இலக்க பதிவு வரைபடத்தில் துண்டு 204 ஆகிய காணித்துண்டு முழுவதும். இதற்கு எல்லைகளாக- வடக்கில் : வீதி ; கிழக்கில் : துண்டு 201 ; தெற்கில் : துண்டு 206 ; மேற்கில் : துண்டு 205 என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு எட்டும் நூறில் இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8-25/100). இது கொழும்பு காணிப்பதிவகத்தில் வெள்ளவத்தை 148/28 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2007, செத்தெம்பர் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணி தொடக்கம் அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- சித்திகரமான கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% (கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனைத் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கொள்வனவு விலைக்கு ஏற்புடைத்தான வரிகள், அறவீடுகள் என்பவற்றுடன் சேர்த்து நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்குச் செலுத்தப்பட வேண்டும்) ;

(2) உள்ளூரதிகார சபைக்கான வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% ;

(4) விளம்பரச் செலவுகளும் வங்கியால் உறப்பட்ட ஏனைய செலவுகளும் ;

(5) விற்பனையின் நிபந்தனைகளுக்கு நொத்தாரிசுவின் அத்தாட்சிப்படுத்தும் கட்டணம் ;

(6) எழுதுவினைஞரினதும் அழைப்போனினதும் கட்டணம் ரூபா 500.

உரித்து உறுதிகளையும் அனைத்து ஆவணங்களையும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரியில் பார்வையிடலாம். தொலைபேசி இல. : 4313158.

ட்ரையட் ஒக்ஷனியர்ஸ்.

இல. 155/1, பெல்லன்வில,
பொரலஸ்கமுவ,
தொலைபேசி இல. : 011-2731317, 2724133
மின்னஞ்சல் : triaddudley@yahoo.com

8-1074

## சம்பத் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி கடன்களை அறவிடுதல் (விசேட விதிகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. : 0015 5001 0867-சுசீர ரணவீர

2006.01.06 ஆந் திகதிய 'தினக்குரல்', 'ஐலண்ட்', 'திவயின' புதினப் பத்திரிகைகளிலும் 08.09.2006 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி கடன்களை அறவிடுதல் (விசேட விதிகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2004.11.25 ஆந் திகதிய வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2004, சனவரி 14 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதின்மூன்று இலட்சம் ரூபாவுக்கு (ரூ. 13,00,000) வருடத்திற்கு பன்னிரண்டு தசம் ஒன்பது (12.9%) வீத வட்டியையும் பதின்மூன்று இலட்சத்து தொண்ணூற்றிமூவாயிரத்து எழுநூற்றிமுப்பத்தேழு ரூபா எழுபது சதத்தையும் (ரூ. 13,93,737.70) விளம்பரக் கட்டணங்கள் மற்றும் வேறு ஏதும் கட்டணம் இருப்பின் அவற்றையும் அறவிடுவதற்காக கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகள், சொத்துக்கள் கண்டி அனுமதிபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் 2007.09.25 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மொறவக்க கோரளை உவரக்கலை கிராமத்தில் அமைந்த 'பொல்கஸ்தென்னஹேன' என்றழைக்கப்படும் காணியின் அளவையாளர் அதிபதியால் தயாரிக்கப்பட்ட 1957, நவெம்பர் 30 ஆந் திகதி கொண்ட எப். வி. பி. 11 கொண்ட வரைபடத்தில் லொட் 36 என குறிக்கப்பட்ட காணித்துண்டு- இது வடக்கில் : லொட் 01 G மற்றும் T. P. 398800 ஆலும் ; கிழக்கில் : ஹொரகல்ல கிராம எல்லையாலும் ; தெற்கில் : D. R. 3873 மற்றும் பாதை ஒதுக்கீடு மற்றும் D. R. 3873 ஆலும் ; மேற்கில்: துண்டு இல. 48 ஆலும் சூழப்பட்டு பதினைந்து ஏக்கர் இரண்டு றூட்மற்றும் ஆறு பேர்ச்சஸ் (15ஏ. 2றூ. 6பே.) கொண்டதாக மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் எல்லாம் உட்பட கொடபொல காணி L. D. O. பதிவில் 5341 இன்கீழ் பதியப்பட்டுள்ளது. அனுமதிபெற்ற நில அளவையாளர் ஐ. கொடம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000.06.06 ஆந் திகதி 168/00 இலக்கம் கொண்ட வரைபடத்தில் லொட் 36 என குறிக்கப்பட்டுள்ளது. கூறப்பட்ட லொட் 36 கூறப்பட்ட எப். வி. பி. 11 மீளளவை செய்யப்பட்டதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-1093/1

**சம்பத் வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளின் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் விற்பனை அறிவித்தல்*

கணக்கு இல. : 0020 5000 7521 - டி. எஸ். பி. பிரேமசிறி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளின் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்களினால் 2004.11.25 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு, 2005.12.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2005.11.28 ஆந் திகதிய 'திவயின', 'ஐலன்ட்', 'தினக்குரல்' செய்திப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, பத்து இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்றெண்பத்திரண்டு ரூபா நாற்பத்தொரு சதத்தையும் (ரூ. 10,50,282.41) 2004, ஒகத்து 8 ஆந் திகதி முதல் விற்பனைத் தினமாகிய இற்றைவரை, ஆண்டுக்கு பதினேழு தசம் ஐந்து சதவீதம் (17.5%) என்ற அடிப்படையில் கணிக்கப்பட்ட வட்டியான மேலும் ஒன்பது இலட்சத்து ஏழாயிரம் ரூபாவையும் (ரூ. 9,07,000), விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்களுடன் சேர்த்து (எவையேனும் கொடுப்பனவுகள் பின்னர் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்துக்கொண்டு) மீள அறவிடுவதற்காக, இத்துடன் தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனமும் காணிகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் 18.09.2007 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்கப்படுமென இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அத்துலகம்-பனாவல் இரு கோரளைகளின் பனாவல் கோரளை மேற்கிலுள்ள அஸ்கங்குல என்னுமிடத்தில் அமைந்திருப்பதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஏ. சோமரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்டு 1971, யூலை 30 மற்றும் 1971, செத்தெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 374 இல் காட்டப்பட்டுள்ள 5 ஆம், 6 ஆம் காணித்துண்டுகளின் உப பிரிவாக அமைவதும், அதே நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்டு 1980, ஏப்பிறல் 11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1279 இல் காணித்துண்டு 5A என்று அடையாளம் இடப்பட்டுள்ளதும் மகாவத்தை அல்லது கொலம்பவெதகே ஹித்தாப்பு மகாவத்தை என்று அழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறை செய்யப்பட்டதுமான காணிப்பகுதி முழுவதும். இந்த 5A காணியின் வடக்கில் : வரைபடம் 374 இல் வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள 6 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; கிழக்கில் : வரைபடம் 1279 இல் காட்டப்பட்டுள்ள 5B இலக்கக் காணித்துண்டும் ; தெற்கில் : சமூன் லெப்பைக்கும் ஏனையோருக்கும் சொந்தமான மீகஹவத்தையும் ; மேற்கில் : வரைபடம் 374 இல் காட்டப்பட்டுள்ள 2 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்துள்ளன. இருபத்தைந்து தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25.25பே.) பரப்புடையதும் அதிலுள்ள ஓட்டு வீடு, கராஜ், டொயிலட் முதலிய அனைத்தையும் உள்ளடக்கியதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஏ. சோமரத்னவினால் தயாரிக்கப்பட்டு 1971, யூலை 30 மற்றும் 1971, செத்தெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 374 இலுள்ள 6 ஆம் காணித்துண்டின் வழிச் செல்லும் உரிமையைக் கொண்டதுமான இக்காணி, அவிசாவளை காணிப்பதிவகத்தில் R 73/146 என்ற தொகுதி/கோவையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-1093/2

**சம்பத் வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**ஆதனம் ஏல விற்பனை**

கணக்கு இல. : 0001 1004 2647 - தொறலசேன தேயிலைத் தொழிற்சாலை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்டதும், 1999,திசெம்பர் 30 ஆந் தேதியிடப்பட்டதும் 2000, பெப்புருவரி 3 ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2000, ஏப்பிறல் 28 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய தினசரிச் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது மான தீர்மானமொன்றைப் பின்பற்றி, இருபது இலட்சத்து எழுபத்தோராயிரத்து அறுநூற்றைம்பத்தொன்பது ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூபா 20,71,659.91) கொண்ட தொகையை 1999.11.01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஐந்து இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூபா 5,10,000) கொண்ட தொகைக்கு 11% ப்படியும் எட்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூறு ரூபா (ரூபா 8,66,600) கொண்ட தொகைக்கு 19.5% ப்படியும் மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து தொளாயிரம் ரூபா (ரூபா 3,21,900) கொண்ட தொகைக்கு ஆண்டொன்று 19.5% ப்படியும் கணக்கிடப்பட்ட வட்டியுடனும், இதுவரை (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையேனுமிருப்பின்) அவை போக விளம்பரச் செலவுகள், விற்பனையில் உறப்பட்ட ஏனைய இறுப்பனவு கள் என்பவற்றோடு சேர்த்து அறவிடுவதற்காக, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்கள், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை 2007.09.27 ஆந் திகதியன்று ஸ்தலத்தில் வைத்து பி. ப. 1.00 மணிக்கு பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாட்டம், காலி நான்கு கிறவட்சுகளுக் குள்ளாக அக்மீமன, தலகஸ்யாயவில் அமைந்துள்ள, அதிற் காணப்படும் மரங்கள், தோட்டப்பயிர்கள், கட்டிடங்கள் மற்றெல்லா வற்றுடனும் சேர்ந்த பதகலயமுல்லே கண்ட என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். தர்மவர்த்தன வினால் ஆக்கப்பட்ட 1980.12.04 ஆந் தேதிய 1161 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட 'ஏ' காணித்துண்டென அடையாளமிடப்பட்டதும் 'தொறலஹேன கந்தவை' வடகிழக்கெல்லையாகவும் ; படகெல்யாய முல்ல கந்த மறுபெயர் அட்டபககந்தவை தென்கிழக்கெல்லை யாகவும் ; அதே காணியின் 'பீ' மற்றும் 'சி' காணித்துண்டை தென்மேற்கெல்லையாகவும் ; தொறலகேனவையும் வீதியையும் வடமேற்கெல்லையாகவும் கொண்டதும் விஸ்தீரணத்தில் மூன்று றூட் முப்பத்தொன்பது பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 39பே.) கொண்டதும் காலி மாவட்டக் காணிப் பதிவகத்தில் பீ 141/72 என்பதில் பதிவு செய்யப்பட்டதுமான அக்காணித்துண்டு முழுவதும்.

நிறுவப்பட்டுள்ள எந்திர சாதனங்களுடனும் நிறுவப்பட்டுள்ள இயந்திரங் களுடனும் கூடியது.

கம்பனிச் செயலாளர்.

8-1093/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.